பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை 20.09.2022 கதிர் 206

## பிரதமர் பதவிக்கு ஆசைப்படவில்லை

### கோட்டா விளக்கம்



அரசியலுக்குள் மீண்டும் பிரவேசிப்பது தொடர்பில் நான் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. இந்நிலையில், எனக்குப் பிரதமர் ☞2

## சார்ள்ஸ் மன்னருடன் ஜனாதிபதி சந்திப்பு



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக இலண்டன் சென்ற உலகத் தலைவர்களுக்கும் மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கும் ☞2

# போலியான வாக்குறுதி வழங்கி தமிழர்களை ஏமாற்றுவார் ரணில்

### இப்படி எச்சரிக்கின்றார் சஜித்



ராஜபக்ஷக்கள் போல் போலியான வாக்குறுதிகளை வழங்கி தமிழர்கள் உள்ளிட்ட மூவின மக்களையும் நாட்டையும் ஏமாற்றுவதுதான் ரணிலின் திட்டம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

## பொருளாதார வீழ்ச்சி: ஆராயத் தெரிவுக்குழு

### சபாநாயகரிடம் கோரிக்கை



இலங்கையில் 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு ☞2

## 8 தமிழக மீனவர்கள் காரைநகரில் கைது



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 8 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு - ஜெகதாப் பட்டினத்தில் இருந்து நேற்று 8 மீனவர்களுடன் ☞2

## உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### ஆணைக்குழுவிடம் சஜித் அணி கோரிக்கை



தேர்தல்கள் ஆணைக் குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளரை (உள்ளூராட்சி) இன்று சந்தித்த ஐக்கிய ☞2

## இலங்கை அரசை மீறி எதுவும் நடைபெற சந்தர்ப்பம் இல்லை

### ஐ.நாவின் புதிய பிரேரணை குறித்து ஜனாதிபதி கருத்து



ஜெனிவாச் சவாலை நாம் இலகுவாக முறியடித்தே தீருவோம். புதிய பிரேரணை தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. இலங்கை அரசை மீறி நாட்டுக்கு எதிராக எதுவும் நடைபெற சந்தர்ப்பம் இல்லை. இந்நிலையில், அவ்விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துக்களை வெளியிடும்போது அரசு என்ற ரீதியில் மிகவும் அவதானமாக இருங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலண்டன் செல்வதற்கு முன்னர் ☞2

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி

## புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் அணிதிரண்டு கையெழுத்து!





பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகவும், அந்தச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரியும் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ☞2

## தமிழினத்தை ஒடுக்க பேரினவாதம் வியூகம்

### முன்னாள் எம்.பி. சிறிநேசன் குற்றச்சாட்டு



இன, கலாசார வரலாற்று ஆதார அழிப்புகள், நிலப் பறிப்புகள் ஊடாக தமிழினத்தை ஒடுக்கச் சிங்கள பௌத்த மேலாதிக்க அதிகார வர்க்கம் எண்ணுகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் குற்றம் சாட்டினார். ☞8

## தியாகி திலீபன் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக 15 பேரைக் கொண்ட பொதுக் கட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்த நினைவேந்தலை மக்கள் ☞8

## 12 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இன்றும் 12 பேர் அகதிகளாகத் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து படகு வழியாகத் தப்பிச் ☞2

## 7 வயது சிறுமி கொலை: கசிப்பு வியாபாரி கைது

தனது காதலியின் மகளான ஏழு வயதுச் சிறுமியைப் படுகொலை செய்த சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த கசிப்பு வியாபாரியை பொலிஸ் மற்றும் அதிரடிப் படை ☞2

## சிறுமிகளை வன்புணரும் கூடாரமாக யாழ். கோட்டை

### மாவட்ட செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் நகரிலிருந்து தீவுப்பகுதிக்குச் செல்லும் பிரதான மார்க்கமான பண்ணைப் பாலத்தின் கீழ்ப் பகுதி ☞2

## இலங்கை அரசை மீறி.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசின் மூத்த உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பின்போது தெரிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

ஜெனிவா நெருக்கடிக்குக் கடந்த நல்லாட்சி அரசைக் குறைகூறி எந்தப் பயனும் இல்லை. அந்தக் காலப் பகுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியதில் எந்தத் தவறும் இல்லை. அந்த விடயத்தில் நல்லாட்சி அரசு வெற்றியும் கண்டுள்ளது.

ஜெனிவா விவகாரம் தொடர்பில் இனவாதத்தையோ அல்லது மதவாதத்தையோ தூண்டும் வகையில் எவரும் கருத்துக்களை வெளியிடாதீர்கள் என்று ஜனாதிபதி ரணில் மேலும் கூறினார் என்று தெரியவருகின்றது.

## போலியான..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், மக்களை ஏமாற்றும் திட்டம் எதுவும் இனிமேல் வேகாது என்பதை ரணில் - ராஜபக்ஷ சதிகாரக் கும்பம் கவனத்தில்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும், தேசிய பிரச்சினைகளுக்கும் அடுத்த சில மாதங்களில் இறுதித் தீர்வு காணப்படும் என நான் நம்புகின்றேன்' - என்று கடந்த வாரம் நடைபெற்ற தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் - ராஜபக்ஷ அரசுக்குத் தேர்தல் ஒன்றின் மூலம் முடிவுகட்ட நாட்டு மக்கள் தயாராகவுள்ளனர். ஆனால், தோல்வி உறுதி என்பதால் தேர்தலை நடத்தாமல் காலத்தைக் கடத்த இந்த அரசு முயற்சிக்கின்றது.

தேர்தல் ஒன்று நடந்தால் அதில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி வெற்றிவாகை சூடும்.

எமது ஆட்சியில் ஓரிரு மாதங்களில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வுகளைக் காண்போம் -என்றும் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

## உள்ளூராட்சி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதம செயற்பாட்டு பிரதானி நளின் பண்டார, ஊடகப் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாத..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கமைய நேற்று மாலை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை புத்தளத்தில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்றுக் காலை அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் பௌத்த பிக்குகளும், சிங்கள மக்களும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் பதவிக்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவி வழங்குவது தொடர்பில் யார் முடிவு எடுத்தது? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ.

நான் பதவி ஆசை பிடித்தவன் என்றால் ஜனாதிபதிப் பதவியிலிருந்தே விலகியிருக்கமாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குழு ஒன்று ஆர்வம் காட்டி வருகின்றது எனவும், குறித்த கட்சியின் பிறிதொரு குழு தினேஷ் குணவர்த்தன தொடர்ந்தும் பிரதமராக இருக்க வேண்டும் என்று கூறி வருகின்றது எனவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்படி விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

எனக்கு மட்டுமல்ல ராஜபக்ச குடும்பத்தில் எவருக்கும் பதவி ஆசை இல்லை. மக்களின் அமோக ஆணையுடன்தான் ராஜபக்ஷக்கள் பதவிக்கு வந்தார்கள். இதனை எதிரணியினரும், தாங்கள் நினைத்த மாதிரி செய்திகளை வெளியிடும் ஊடகங்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது பிரதமர் பதவி வகிக்கும் தினேஷ் குணவர்த்தன அந்தப் பதவிக்குரிய முழுத் தகுதிகளையும் கொண்டுள்ளார். ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் மூத்த அரசியல்வாதிகளுள் அவர் முக்கியமானவர் - என்றும் கோட்டாபய மேலும் கூறியுள்ளார்.

## பொருளாதார..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியும், டலஸ் ஆதரவு அணியும் இணைந்தே சபாநாயகரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

அத்துடன், இது தொடர்பான ஆவணம் சபாநாயகரிடம் இன்று கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட 35 எம்.பிக்கள் இதில் கையொப்பமிட்டுள்ளனர்.

## 7 வயது..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் கலவான நகரில் கைது செய்தனர்.

தனது மனைவி மற்றும் இரண்டு காதலிகளுடன் ஒரே வீட்டில் குடித்தனம் நடத்திவந்த சந்தேகநபர் ஒரு வாரத்துக்கு முன் தன் காதலி ஒருவரின் மகளான ஏழு வயது சிறுமியை அடித்துப் படுகொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட தேடப்பட்ட சந்தேகநபர் கல வான பிரதேசத்தில் மறைந்திருக்கின்றார் என்று கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் மற்றும் பொலிஸ் அதிரடி ப் படை குழுக்களால் நேற்றுமாலைகைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது காதலியின் ஏழு வயது மகளை அடித்துப் படுகொலை செய்தார் எனவும், இதற்கு இச்சிறுமியின் தாயான காதலியும் சந்தேகநபரின் இன்னொரு காதலியும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் எனவும், இறந்த சிறுமியை இரத்தினக்கல் தோண்டப்பட்ட குழியில் உறையொன்றில் போட்டு சந்தேகநபர் புதைத்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தனது மகளின் கொலைக்குச் சந்தேகநபரான காதலனுக்கு உதவியாக இருந்த தாய் தனது மகள் காணாமல் போனார் என்று பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய முயற்சிக்கபோது பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் இந்தக் கொலைச் சம்பவம் அம்பலத்துக்கு வந்ததுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர்.

## 8 தமிழக..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புறப்பட்ட மீன்பிடிப் படகே காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கடற்படையினரிடம் இன்று சிக்கியது.

படகுடன் கைதுசெய்யப்பட்ட 8 மீனவர்களும் மயிலிட்டித் துறை முகத்துக்குக் கொண்டு வரப்பட்டு யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறைநீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## சிறுமிகளை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் கோட்டைக்கு வெளியேயுள்ள பகுதி என்பனவற்றில் தொடர்ச்சியாக பல சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று யாழ். மாவட்ட செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முனியப்பர் ஆலயத்துக்கு பின்பாகவும், கோட்டைக்கு வெளியேயும் உள்ள பகுதியிலேயே பாடசாலைச் சிறுமிகள் பலர் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

காதலர்கள் என்ற போர்வையில் அங்கு அழைத்துவரப்படும் சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றனர்.

கடந்த சில மாதங்களாக இந்தச் சம்பவங்கள் அங்கு அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று பண்ணைப் பாலத்தின் கீழ்ப் பகுதியிலும் இதேபோன்று சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பில் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்றும், பொலிஸார் இந்தப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்றும் யாழ். மாவட்ட செயலகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 12 பேர் அகதி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றவர்கள் இந்தியாவின் ஆளுகையில் உள்ள 4ஆம் திட்டில் தரை இறக்கி விடப்பட்டுள்ளனர். இவர்களை அவதானித்த தமிழக மீனவர்கள் தமது பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து அகதிகள் நின்ற இடத்துக்குச் சென்ற இந்தியக் கரையோரக் காவல் படைக்குச் சொந்தமான படகு அகதிகளை மீட்டு இராமேஸ்வரத்துக்குக் கொண்டு சென்றது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அகதிகள் தற்போது பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர்.

இலங்கையில் இருந்து இவ்வாறு சென்றவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களும், 6 சிறுவர்களும் அடங்குகின்றனர்.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்த இந்த 12 பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சாள்ஸ் மன்னருடன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடையிலான சந்திப்பு பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மூன்றாம் சார்ள்ஸ் மன்னருடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மனைவியான முதல் பெண்மணி சிரேஷ்ட பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தர்மமும் அதர்மமும்

மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து கிடக்கும் இலங்கை நாடு அதிலிருந்து மீண்டெழுவதற்கான வழிவகைகள் தெரியாது தடுமாறி நிற்கின்றது.

இந்தச் சமயத்தில் மீண்டெழுவதற்கு உதவுமாறு சர்வதேச தரப்புகளிடம் அது அவசர கோரிக்கை விடுக்கின்றது.

சர்வதேச நாடுகளும், ஏற்கனவே கடன் வழங்கிய தரப்புக்களும் மற்றும் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவையும் இலங்கைக்கு உதவி அளித்து, அதைத் தூக்கி விடுவதற்கு முன்வந்துள்ளன என்பது உண்மைதான்.

ஆனால், அந்த உதவிகளை விரைந்து செய்வதில் அவற்றின் மத்தியில் ஒரு பின்னடிப்பைக் காண முடிகின்றது. அதுவும் கூட நிஜம்தான்.

அதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

பாதிப்பற்ற நாடு மீண்டெழுவதற்காகத் தான் வழங்கும் உதவிகள், கடன்கள், நன்கொடைகள் போன்றவை தவறாகவோ, ஊதாரித்தனமாகவோ செலவிடப்பட்டு, வீணாகி – அவமாகி – போய் விடக் கூடாது, உண்மையில் நாடு பொருளாதாரத்தில் மீண்டெழுவதற்கான சரியான வழியில் அந்த நிதியோ, உதவியோ செலவிடப்படும் என்ற உறுதி கிட்டினால் மட்டுமே அத்தகைய உதவிகளை வாரி வழங்க அவை முன் வரும்.

ஏற்கனவே உலக நாடுகளிடம் கடன்களை அள்ளி வாங்கியுள்ள கொழும்பு ஆட்சிப் பீடங்கள், அவற்றைத் தவறான முறையில், தமது தவறான கொள்கைக் கோட்பாடுகளுக்காகவும், கொள்ளைக் கோட்பாடுகளுக்காகவும், தமது ஊழல், ஊதாரித்தனங்களுக்காகவும் கண்மண் தெரியாமல் செலவிட்டு, நாட்டின் பொருளாதாரத்தையே மண்ணாக்கிவிட்டன என்பது உலகறிந்த இரகசியம்.

அந்தப் போக்கில் கொழும்பு அரசு தலைகீழ் மாற்றத்தைக் காட்டாத வரையில் உலக நாடுகளின் –அதுவும் சர்வதேச தரப்புக்களின் – உதவிகள் நாட்டுக்குக் கிடைக்கப் போவதில்லை.

கொழும்பு அரசுகள் தமது பௌத்த, சிங்களப் பேரினவாதக் கொள்கைக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் நாட்டின் நிதியைக் கணக்கு வழக்கின்றிச் செலவிடுகின்றன என்பது வெளிப்படையானது.

அதனை இலங்கை தமிழ் வம்சாவளியை சேர்ந்த கனடா நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி ஒரு பேட்டியில் மேலோட்டமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

“இலங்கை இராணுவம் அளவு கணக்கின்றி பெரிதாக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தை விட, இலங்கை இராணுவம் இரண்டு மடங்கு பெரியது” –என்று அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

இந்தனூண்டு சிறிய நாடு, யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளின் பின்னரும், மேலும் படைகளைக் குவித்து, இவ்வளவு பெரிய இராணுவத்தைக் கட்டி எழுப்பி, இவ்வளவு நிதியைக் கரியாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை ஏன் மண்ணாக்குகின்றது என்ற கேள்வி எழுகிறது.

சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கை நடைமுறைப்படுத்தும் தனது மேலாண்மைச் சிந்தனை கோட்பாட்டுக்குச் செயலுருக் கொடுக்கவே இந்த ஊதாரித்தனப் போக்கு என்பது அப்பட்டமானது.

அத்தகைய தரப்புக்கு – ஆட்சிக்கு – சர்வதேச உதவி வழங்கல் என்பது பெரும் அநியாயம், அதர்மமாகவே இருக்கும். அது தர்மமாகாது. அதனால்தான் சர்வதேசங்கள் உதவி வழங்குவதில் பின்னடிப்பைக் காட்டுகின்றன.

### செய்தியால் பலன்; மக்கள் மகிழ்ச்சி!

# தங்கவேலாயுதபுரம் வீதி செப்பனிடப்படுகின்றது

### பிரதேச செயலாளரின் முன்மாதிரியான முயற்சி





(வி.ரி.சகாதேவராஜா)

தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை மிக மோசமாக பாதிக்கப்பட்டு குன்றும்குழியுமாக இருப்பதால் அங்கு சேவையிலீடுபட்டவந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது என்ற செய்தி பத்திரிகையில் வெளிவந்து மூன்று தினங்களுக்குள் அதற்காக பலன் கிடைத்துள்ளது.

ஆம். எமது செய்தியை கண்ணுற்ற திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் எந்திரி என்.கருணைநாதன் ஆகியோர் உடனடியாக செயல்பட்டு 12 கிலோ மீற்றர் நீளமான அப்பாதைப் புனரமைப்புப் பணிகளை விரைந்து ஆரம்பித்தார்கள்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் உடனடியாகத் தமது குழுவினருடன் களத்தில் இறங்கினார்.

தங்கவேலாயுதபுரம் பகுதியில் இருக்கக்கூடிய சமூக அமைப்புகளை அழைத்து அவர்களிடம் இருந்து நிதிஉதவி மற்றும் ஒத்துழைப்பை பெற்று இந்த பாதை செப்பனிடும் பணியை ஆரம்பித்து இருக்கின்றார்.

இதற்கு தங்கவேலாயுதபுரம், தாண்டியடி, கஞ்சிகுடிச்சாறு ஆகிய பிரதேச விவசாய அமைப்புகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகிய பொது அமைப்புகளை அழைத்து கலந்துரையாடினார். அவர்கள் இப் பாதை புனரமைப்பிற்குதேவையானஅத்தனைக்கும் ஒத்துழைப்பைவழங்குவதாகத்தெரிவித்தனர்.

அவர்கள் வழங்கிய நிதியுதவியில் இருந்து முழுதாக டீசலைக் கொள்வனவு செய்தார்கள்.

அடுத்து திருக்கோவில் பிரதேச சபையிடமிருந்து ஜே.சி.பி. இயந்திரம் மற்றும் கல்குவாரி போன்ற இடங்களில் இருந்து உழ்வு இயந்திரங்களையும் பெற்று மக்களின் ஒத்துழைப்போடு இந்த வீதி தற்போது செப்பனிடப்பட்டுவருகின்றது. அங்குள்ளே கல்குவாரி உரிமையாளர்கள் இலவசமாக முப்பது லோட் கல் கிறசர் தூள் களை வழங்கி வைத்தார்கள்.

இது போன்று ஏனைய சில நிறுவனங்களும் தனவந்தர்களும் தாமாக முன்வந்து இந்த பொதுப்பணிக்கு உதவினார்கள்.

மொத்தத்தில் மக்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அத்தனை வேலைப் பளுவுக்கு மத்தியிலும் இந்த வீதியை செப்பனிட்டு அந்த பின்தங்கிய கிராம மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வருவது கண்டு பலரும் பாராட்டி வருகின்றனர்.

# குமார் சங்கக்காரவின் சிலை நிறுவுவதற்கு யாழ். பல்கலையில் அனுமதி கோரவில்லை!

### நிர்வாகம் அறிவிப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை நிறுவுவதற்காக யாரும் அனுமதி கோரவில்லை என்றும், அவ்வாறான எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வைக்கப்படுவதற்காக துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவின் சிலை வடிவமைக்கப்பட் டுள்ளதாக நேற்று (திங்கட்கிழமை) சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பாக பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிலை அமைப்பதற்காக எவரும் அனுமதி கோரவில்லை. வளாகத்தினுள் சிலைகளை நிறுவுவதென்பது நீண்ட பொறிமுறைகளைக் கொண்டது. அவ்வாறான அனுமதி எவையும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

மேற்படி சிலை மன்னாரை சேர்ந்த யாழ். பல்கலைகழக மாணவனால் உருவாக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரத்மலானை விமான நிலைய சேவைகள் யாவும் இடைநிறுத்தம்

சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றான இரத்மலானை விமான நிலைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட இந்த விமான நிலையம் 22 கோடி ரூபா செலவில் நவீனமயமாக்கப்பட்டு தயார்ப்படுத்தப்பட்டது.

இதற்கமைய வாரத்துக்கு மூன்று மாலைதீவு விமானங்கள் அங்கு தரையிறங்கியதோடு தற்போது அந்த விமானங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல் அரசு மரியாதையுடன் நேற்று அடக்கம்









லண்டன், செப்.20

மறைந்த இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல், வெஸ்ட் மினிஸ்டர் ஹோலில் இருந்து ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு, வெஸ்ட்மினிஸ்டர் அபேவில் முழு அரசு மரியாதையுடன் இறுதி சடங்குகள் நடத்தப்பட்டன. பின், விண்ட்ஸர் அரண்மனையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் தேவாலயத்தில், உள்ள அவரது கணவர் இளவரசர் பிலிப் மற்றும் பெற்றோரது கல்லறைகளுக்கு அருகே அடக்கம் செய்யப்பட்டது.

பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத், ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் அரண்மனையில் கடந்த 8 ஆம் திகதி காலமாகியிருந்தார்.

அவரது உடல் ஸ்கொட்லாந்தில் இருந்து விமானம் மூலம் எடுத்து வரப்பட்டு, ராணி வாழ்ந்த பக்கிங்ஹாம் அரண்மனையில் வைக்கப்பட்டது. அப்போது, அரச குடும்பத்தை சேர்ந்தவர்கள் மட்டும் ராணியின் உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பின்னர், பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, இங்கிலாந்துப் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள வரலாற்று


சிறப்புமிக்க வெஸ்ட்மினிஸ்டர் ஹோலில் பொதுமக்கள் அஞ்சலிக்காக ராணியின் உடல் கடந்த 14 இல் வைக்கப்பட்டது. நேற்று காலை வரை பொது மக்கள் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், உள்ளூர் நேரப்படி நேற்று காலை 11:00 மணிக்கு ராணியின் உடல் வைக்கப்பட்டு இருந்த பேழை, வெஸ்ட்மினிஸ்டர் ஹோலில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டது. அப்போது, பிரிட்டன் மக்கள் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி ராணிக்கு தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

ஊர்வலத்தில் மன்னர் மூன்றாம் சார்லஸ், அவரது மகன்கள் இளவரசர்கள் வில்லியம்மற்றும் ஹாரி ஆகியோர் ராணியின் உடலை பின் தொடர்ந்து சென்றனர். 6,000 இராணுவ வீரர்கள் புடைசூழ, ராணியின் உடல் அடங்கிய சவப்பெட்டி ஆயுதங்கள் தாங்கிச் செல்லும் வாகனத்தில் லண்டன் வீதிகளில் ஊர்வலமாக சென்றது. அப்போது, லண்டனின் பிரதான அடையாளமாக திகழும் எலிசபெத் டவரில் உள்ள, 'தி பிக் பென்' என்ற பிரமாண்ட மணி, ராணியின் ஆயுளைக் குறிப்பிடும் விதமாக நிமிடத்துக்கு 96 முறை ஒலித்தது. ராணியின் உடல், 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் அபேவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அரச குடும்பத்தினர், சர்வதேச தலைவர்கள், பொது மக்கள் முன்னிலையில் முழு அரசு மரியாதையுடன் இறுதி சடங்குகள் நடைபெற்றன.

## தைவான் பகுதியில் அடுத்தடுத்து 2 சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள்

### சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு வாபஸ்





யுஜிங், செப்.20

தைவானில் அடுத்தடுத்து 2 சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இவை ரிக்டர் அளவில் 6.8 மற்றும் 6.4 புள்ளிகளாக பதிவாகி உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. தைவானின் தென்கிழக்கு பகுதியில் சனியன்று 6.8 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் உணரப்பட்டது. இதில், யூலி நகரின் அருகே 3 அடுக்கு மாடி கட்டடத்தின் 2 மேல் தளங்கள் இடிந்து விழுந்தன. இதில் 4 பேர் சிக்குண்டனர் எனக் கூறப்படுகின்றது. மேலும், யூலி நகரில் பாலம் ஒன்று இடிந்து விழுந்ததில்சமயம் பாலத்தில் வாகனத்தில் சென்று கொண்டிருந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார், தீயணைப்பு வீரர்கள் இணைந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதில் ஒருவர் மீட்கப்பட்டார். மீதமுள்ள 3 பேரைத் தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து, சிறிது நேரத்தில் அதே பகுதியில் உள்ள சிங் பகுதியில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது இந்த இரண்டு நிலநடுக்கங்களைத் தொடர்ந்து, ஜப்பான் வானிலை மையம் தைவானை ஒட்டிய அந்நாட்டின் தென்பகுதி தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுத்ததுடன் பின்னர், அந்த எச்சரிக்கை திரும்ப பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேசமயம் –

தைவான், யுஜிங்கிலிருந்து கிழக்கே 85 கிலோமீட்டர் தொலைவில் சக்தி வாய்ந்த – ரிக்டர் அளவில் 7.2 ஆன – நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக அமெரிக்க நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிலநடுக்கத்தின் போது ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான காட்சிகள் தற்போது சமூக ஊடகங்கள் மற்றும் அந்நாட்டு ஊடகங்களில் வெளியாகியுள்ளன. உடற்பயிற்சி கூடத்தின் மேற்கூரை இடிந்து விழுந்த போது, அங்கு பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் அலறியடித்து ஓடியுள்ளார். மேலும் ரயில்வே நிலையத்தில் நின்று கொண்டிருந்த ரயில் குலுங்கும் காட்சிகளும் வெளியாகியுள்ளன. இந்த நிலநடுக்கத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், 146 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## ஹிஜாப் சரியாக அணியாத பெண்ணை அடித்துக் கொன்ற ஈரானியப் பொலிஸ்

### ஹிஜாப்பை எரித்து, கூந்தலை வெட்டி அங்கு பெண்கள் எதிர்ப்பு போராட்டம்

ஈரானில் 22 வயது இளம்பெண், சரியாக ஹிஜாப் அணியவில்லை எனக்கூறி அந்நாட்டு பொலிஸார் அடித்துக் கைது செய்தனர். பொலிஸாரின் தாக்குதலில் அப்பெண் உயிரிழந்தமையை அடுத்து அந்நாட்டு பெண்கள் எதிர்ப்பு தெரிவித்து தங்களது ஹிஜாப்பை தீயிட்டுக் கொளுத்தியும், தங்களது கூந்தலை வெட்டியும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் நாடான ஈரானில் பெண்கள் மற்றும் 9 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் இஸ்லாமிய மத உடையான ஹிஜாப் அணிவது 1979ம் ஆண்டு முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் வழங்கப்படுகின்றன.

இதனிடையே, அந்நாட்டின் குர்திஸ்தான் மாகாணம் சஹிஸ் நகரை சேர்ந்த 22 வயதான மாா அமினி என்ற இளம்பெண் தனது குடும்பத்துடன் கடந்த 13 ஆம் திகதி தலைநகர் தெஹ்ரானுக்கு சென்றுள்ளார். அதேவேளை, ஈரானில் உடை தொடர்பான நெறிமுறைகளை கடுமையாக அமுல்படுத்தும் நெறிமுறை பொலிஸ் பிரிவு ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அந்தப் பொலிஸ் பிரிவினர் மாா அமினி, தனது தலைப்பகுதியை ஹிஜாப்பால் முழுமையாக மறைக்கவில்லை எனக்கூறிஅவரைக்கைதுசெய்துகடுமையாகத்தாக்கியுள்ளனர்.

இதனால், கோமா நிலைக்கு சென்ற மாா அமினிக்கு கடந்த சில நாள்களாக தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனையடுத்து உயிரிழந்த மாா அமினிக்கு ஆதரவாகப் பொலிஸாரைக் கண்டித்து அந்நாட்டு பெண்கள் ஒன்றுதிரண்டு போராட்டத்தில் இறங்கினர்.

ஹிஜாப்பால் ஒருபெண் உயிரிழந்தமையை அடுத்து, தங்களது ஹிஜாப்பைக் கழற்றித் தீயிட்டுக் கொளுத்தினர். மேலும், தங்களது கூந்தலையும் வெட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்கள் பெருமளவு ஹிஜாப்பை எரித்து போராட்டத்தில் இறங்கியது ஈரானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காங்கிரஸ் தலைவருக்கான தேர்தலில் சசிதரூர் – அசோக் கெலாட் போட்டி?

புதுடில்லி, செப்.20

'காங்கிரஸ் கட்சியில் சீர்திருத்தம் வேண்டும்' என, கட்சியின் மூத்த தலைவர்கள் 23 பேர் போர்க்கொடி தூக்கினர். இந்த அதிருப்தி குழு தலைவர்களில் ஒருவரான குலாம் நபி ஆசாத், சமீபத்தில் கட்சியின் அடிப்படைஉறுப்பினர்உட்படஅனைத்துபொறுப்புகளில் இருந்தும் ராஜினாமா செய்தார்.

இதற்கிடையே, காங்கிரஸ் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல், அடுத்த மாதம் 17 இல் நடக்கவுள்ளது. போட்டியிட விரும்பும் நிர்வாகிகள் வரும் 24 ஆம் திகதி முதல் 30ம ஆம் திகதி வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம், வாக்கு எண்ணிக்கை ஒக்ரோபர் 19 இக்எண்ணப்பட்டு அன்றே முடிவு அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களின் விவரங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என, அதிருப்தி தலைவர்களில் ஒருவரான, லோக்சபா எம்.பி. சசி தரூர் உள்ளிட்டோர் வலியுறுத்தி வந்தனர்.

இதையடுத்து, காங்கிரஸ் தலைவர் தேர்தலில் சசி தரூர்போட்டியிடப்போகிறார்எனத்தகவல்வெளியானது.

## ராகுல் காந்தி தொடர்ந்து மௌனம்

இந்நிலையில் நேற்று மதியம் டில்லியில் உள்ள சோனியா வீட்டுக்கு சென்ற சசி தரூர், அவரைச் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பில் காங்கிதஸ் தலைவர் தேர்தலில் தரூர் போட்டியிட சோனியா சம்மதம் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. காங்கிரஸ் எம்.பியும், சோனியாவின் மகனுமான ராகுல் போட்டியிட்டியின்றி தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ராகுல் இதுவரையில் தான் போட்டியிடுவது குறித்து எந்த தகவலும் கூறாததால், சசிதரூர் போட்டியிட ஆயத்தமாகியுள்ளார்.

இது ஒருபுறம் இருக்க, ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட்டும் தலைவர் தேர்தலில் களமிறங்குவார் எனக் கூறப்படுகிறது.

தலைவர் பதவிக்கு போட்டியிட ராகுல் விரும்பாத பட்சத்தில், ராஜஸ்தான் முதல்வர் பதவியை சச்சின் பைலடிடம் கொடுத்துவிட்டு அசோக் கெலாட்டை டில்லி அரசியலுக்கு கொண்டுவர கட்சி மேலிடம் திட்டமிட்டுள்ளது.

சசிதரூர் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியான நிலையில், ராகுல் தலைவராக போட்டியிட வேண்டும் என ராஜஸ்தான் மாநில காங்கிரஸ் உள்பட பல மாநிலங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ராஜஸ்தானில் இந்த தீர்மானத்தை முன்மொழிந்ததே அசோக் கெலாட் தான் என்றாலும், ராகுலின் முடிவுக்காக அவர் காத்திருக்கிறார்.

காங்கிரஸ் தலைவர் தேர்தலில் ராகுல் போட்டியிட தயங்கி வருவதால் சசிதரூர் – அசோக் கெலாட் இடையே போட்டி இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரத்தில், நேரு குடும்பத்தினர் இல்லாமல் காங்கிரஸ் தலைமையைக் கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதும் சந்தேகமே. இவை அனைத்திற்கும் தயக்கமின்றி ராகுல் ஒரு முடிவுக்கு வருவதே பதிலாக அமையும்.

# தி.மு.கவைத் தலை முழுகினார் என சுப்புலட்சுமி ஜெகதீசன் அறிவிப்பு!



சென்னை,செப்.20

தமிழகத்தில் ஆளும் தி.மு.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்புலட்சுமி ஜெகதீசன் துணைப் பொது செயலாளர் பதவியை ராஜினமா செய்தார் எனத் தகவல்கள் பரவி வந்தன.

நேற்று சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த ஆலோசனை கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ளவில்லை. இதனால் சுப்புலட்சுமி ஜெகதீசன் ராஜினாமா செய்துவிட்டார் எனச் செய்திகள் தொடர்ந்து வெளியாகி வந்தன. இந்த நிலையில், தி.மு.கவில் இருந்தே தாம் விலகு கிறார் என சுப்புலட்சுமி ஜெகதீசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்பது எனது விருப்பம். 2009 ஆம் ஆண்டிற்கு பிறகு கட்சி பணிகளை மட்டுமே செய்து வந்தேன் என்று தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 29 ஆம் திகதியே விலகல் கடிதம் அளித்துவிட்டாரென இன்றைய திகதியிட்டு ஷாவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# பீகாரில் பதினொரு பேர் மின்னல் தாக்கி மரணம்!



பாட்னா,செப்.20

பீகாரின் மூன்று மாவட்டங்களில் 11 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர். பூர்னியா மற்றும் அராரியாவில் தலா 4 பேரும், சுபாலில் 3 பேரும் இப்படி மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிவாரணத் தொகை வழங்கப்படும் என முதல் மந்திரி நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

மோசமான வானிலையில் கவனமாக இருங்கள். இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள பேரிடர் மேலாண்மைத் துறையின் பரிந்துரைகளைப் பின்பற்ற வும் என்று பீகார் முதல் மந்திரி நிதிஷ்குமார் டுவீட் ஒன்றை பகிர்ந்துள்ளார்.

# ராகுல் காந்தியின் நடைப் பயணம் 13ஆவதுநாளாகத்தொடர்கின்றது



திருவனந்தபுரம்,செப்.20

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, இன்று 13 ஆவது நாளாக தொண்டர்களுடன், கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் நடைப்பயணத்தைத் தொடங்கினார். மத்தியில் ஆளும் பா.ஜ.கவுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டும் நோக்கில் 'பாரத் ஜோடோ' நடைப்பயணத்தை ராகுல் காந்தி மேற்கொண்டுள்ளர்.

கன்னியாகுமரியில் தொடங்கிய இந்தப் பயணம் காஷ்மீரில் நிறைவு பெறுகிறது. தமிழகத்தில் நிறை வடைந்த நடைப்பயணம், தற்போது கேரளத்தில் நடைபெற்று வருகிறது. கேரளத்தில் ராகுல் காந்தியின் நடைப்பயணம் இன்று 13 ஆவது நாளாக நடைபெற்று வருகிறது. ஆலப்புழா மாவட்டத்தில் நடைப் பயணத்தை ராகுல் காந்தி தொடங்கியுள்ளார்.

# மோடி அரசு திறந்து விட்டுள்ள சிவிங்கிப் புலிகள் இவைதான்



புதுடெல்லி:

ஆப்பிரிக்க நாடான நமீபியாவில் இருந்து 8 சிவிங்கிப் புலிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டன. நமீபியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட அவற்றை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய பிரதேசத்தில் உள்ள குணோ தேசியபூங்காவில் விடுவித்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடி அரசு கொண்டு வந்த 8 சிவிங்கிப் புலிகள் இவைதான் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் கட்சியின் எம்.பி. யான மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக கார்கே வெளியிட்டுள்ள டுவிட்டரில், வேலையின்மை, பணவீக்கம், வறுமை, பட்டினி, வகுப்பு வாதம், வெறுப்பு, வன்முறை, அடக்குமுறை ஆகிய இந்த எட்டு சிவிங்கிப் புலிகளும் மோடி அரசால் இந்திய மக்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ளன எனப் பதிவிட்டுள்ளார்.

# தனியார் தொழிற்சாலைக்கென இடம் ஒலுவில் துறைமுகத்தில் வழங்குவதா?

## வேண்டாம் என்கிறார் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம்










(ஏ.எம்.ஆஷிப்)

மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப் பதற்கு இடம் வழங்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துள் ளோம். இம்முடிவை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிர ஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இரண்டு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் பொது நூலக கட்டடத் திறப்பு விழா சனிக்கிழமை இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவி சாளர் எம்.அமானுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

அம்பாறை மாவட்டத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழந்து வருகின்றனர். ஆனால் சில இனவாதிகள் இன முறுகல்களை ஏற்படுத்துவதற்கு எத்தனித்து வருகின்றார்கள். இதனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறியடித்து, சுமூகமான நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசரத் தீர்வு காணுமாறு, ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம். அதேவேளை ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையினர் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, மீன்பிடித் துறைமுக திணைக்களத்துக்கு ஒப்படைத்துள்ளனர். இதில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளாய்வு செய்ய வேண்டுமென அவரிடம் கோரிக்கை விடுத்தி ருக்கிறோம்.– என்றும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்

# ‘வரலாறு கூறும் நற்பிட்டிமுனை’ சரித்திர நூல் வெளியிடப்பட்டது





(வி.ரி சகாதேவராஜா)

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எழுத் தாளர் எஸ்.சிவகுருநாதன் எழுதிய ‘வரலாறு கூறும் நற்பிட்டிமுனை’ எனும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்முனை வலய ஓய்வு நிலை கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.இலங்கநாதன் தலைமையில் இடம் பெற்ற விழாவில் பிரதம அதிதியாக கல் முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

முன்னதாக, அதிதிகள் மலர்மாலை அணிவித்து பாண்ட் வாத்தியத்துடன் வரவேற்று, மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை என்பன இடம் பெற்றன.

இவ்விழாவில், நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசராலயம் மற்றும் சேனைக் குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய தலைவர் தம்பிராஜா ரவிராஜ், சிவசக்தி மகா வித்தியாலய அதிபர் தி ருமதி யோகேஸ்வரி இராமநாதன் மற் றும் ஸ்ரீபாத தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கே. துரைராஜசிங்கம், கிராமிய தொழில் துறைத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும், இவ் விழாவில் நற்பிட்டி முனை ஆலய தலைவர்கள், அதன் உறுப்பினர்கள், பிரதேச பொதுமக்கள் சமூக சேவையாளர்கள் எனப் பலருப் கலந்து கொண்டனர்.

நூல் தொடர்பான மதிப்பீட்டு உரையைத்தென்கிழக்குபல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் சஞ்சீவி சிவகுமா நிகழ்த்தினார்.

அதனைத்தொடர்ந்து வருகை தந்த அதிதிகளுக்கு நூல் பிரதிகளை நூலா சிரியர் எஸ். சிவகுருநாதன் வழங்கி வைத்தார்.

# தேசியக்கொடியைக் கையிலேந்தி போராடியவர்கள் குழந்தைகளை ஏந்தியவாறு போராடும் நிலைவரும்!

## இந்நிலைவந்தால் ஆட்சியாளர்கள் தாங்கமாட்டார்கள் இரா.சாணக்கியன் அநுராதபுரத்தில் வீராவேசப் பேச்சு

தேசியக் கொடியையும் பதாதைகளையும் ஏந்திய நாட்டு மக்கள் கையில் பிள்ளைகளுடன் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமை ஏற்பட் டால், நாட்டின் நிலைமை மிகவும் பாரதூரமாக அமைந்துவிடும். அவ்வாறு ஒரு நிலைவந்தால் ஆட்சியாளர்கள் தாங்கமாட்டார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று (திங் கட்கிழமை) அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்டு ஊடகங்க ளுக்குக் கருத்து வெளியிட்ட அவர்

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்து பெறும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

காங்கேசன் துறை முதல் அம்பாந்தோட்டை வரை வாகனப் பேரணியாக எமது இந்தப் பணி இடம்பெறுகின்றது. அரசாங்கத்துக்;கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் அனைவரும் பயங்கரவாதி களா?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகே பயங்கரவாதியா? எனக் கேட்க விரும்புகிறேன்.

அவர் இந்த நாட்டு மக்களுக்காகத்தான் போராடினார். இவர் மட்டுமன்றி, எதிர்காலத்தில் பல சிங்கள இளைஞர்களும் இந்தச் சட்டத்தால் கைது செய்யப்படுவார்கள்.

இன்று தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று சிங்கள பிரதிநிதிகள் கூறும் அளவுக்கு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இது உண்மையில் மகிழ்ச்சியான விடய மாகும்.

ஆனால், மக்களையும் போராடிய இளைஞர்களையும் பிரிக்க அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது. இதனால்தான், போராடிய அனைவரையும் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்க அரசாங்கம் முற்படுகிறது.

மூன்று வேளை உணவு உண்டுவந்த மக்கள், இன்று வெறும் இரண்டு வேளை உணவைத்தான் உட்கொள்கிறார்கள்.

கடந்த காலங்களில் தேசியக் கொடியையும் பதாதைகளையும் ஏந்தி போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள், எதிர்காலத்தில் தங்களின் பிள்ளைகளை கையில் சுமந்து கொண்டு, போராட்டத்துக்கு வந்தால் நிலைமை பாரதூரம ானதாக இருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் ம றந்துவிடக் கூடாது.

எதிர்காலத்தில் இலங்கையர் அனைவரையும் பயங்கரவாதிகளாக சிந்திரிக்க இடமளிக்க வேண்டாம்.- என்றார்.



## பாண்டிருப்பு திரௌபதை அம்மன் மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை, பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹா மகோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

இன்று மாலை திருக்கதவு திறத்தலும், கடலுக்குச் சென்று ஆராதனை செய்து ஊர் ஆராவாரம் பண்ணி ஊர்வலம் வருதலுடன், ஆராதனையுடன் கொடியேற்றலும் இடம்பெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சுவாமி எழுந்தருளப்பண்ணல் இடம் பெறும். மறுநாள்

27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை நாட்கள் வெட்டுதலும் ஒக்டோபர் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை கல்யாணக்கால் வெட்டுதலும்,ஊர்வலமும் இடம் பெறும்.

05ஆம் திகதி புதன்கிழமை வாள் மாற்றுதலும்,பரந்தாமன் பஞ்சபாண்டவர் ஸ்ரீ திரௌபதா தேவி சகிதம் வனவாசம் செல்லுதலும்,அதைத்தொடர்ந்து அஞ்ஞாத வாசம் செய்தலும் இடம் பெறும்.

06 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அருச்சுனர் பாசுபதம் பெறத்தவம் செய்தலும்,அரவானைக் களப்பலியிடலும் இடம் பெறும்.

07ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை வீரகும்பம் நிறுத்தலும்,தீ மூட்டுதலும், பிற்பகல் கடல் குளித்தலும்,மஞ்சள் குளித்தலும், அதனைத் தொடர்ந்து தீ மிதித்தல் வைபவம் நடைபெறும்.

மறுநாள்8ஆம்திகதிசனிக்கிழமைபகல்பாற்பள்ளயமும்,தருமர் முடிசூட்டு வைபவமும். வாழிபாடுதலும், இரவு அம்மனின் ஊர்வலத்துடன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைதலும் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

## அத்தியாவசியமருந்துகள்பற்றாக்குறை வைத்திய அதிகாரிகள் சங்கம் விசனம்!

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைகளுக்கான உபகரணங்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாக அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.


டொலர் பற்றாக்குறையே இதற்கான காரணம் என அந்த சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மருந்துகளுக்கான விலையைக் கட்டுப் பாட்டில் வைத்திருக்க வேண்டியது சுகாதார அமைச்சினுடைய பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்களுக்கான அத்தியாவசிய மருந்துகளுக்கு அரச வைத்தியசாலைகளில் பாரிய பற்றாக்குறை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மாதாந்த மருத்துவ சிகிச்சைகளுக் காக வருகை தரும் கர்ப்பிணித் தாய்மார்கள் ம ற்றும் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் அவர் தெரி வித்துள்ளார். அதிக விலையுடைய மருந்துகளை இறக்குமதிசெய்வதற்குதனியாருக்குஅரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை நடைமுறைக்கு சாத்தியமற் றது எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

# சம்மாந்துறை பத்திரகாளி ஆலயத்தில் பாற்குட பவனி







(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்திற்கான பாற்குடபவனி, நேற்று திங்கட்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நேற்று கோரக்கர் பிள்ளையார் ஆலயத் தில் இருந்து பாற்குடபவனி பிரதான வீதி வழியாக பத்திரகாளி அம்மன் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் கடந்த17 ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 நாள்கள் திருவிழாக்கள் இடம் பெற்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைகிறது.

தினமும் பகல் 12 மணிக்கு மதிய பூஜையும் மாலை 6 மணிக்கு இரவு பூஜை யும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம்பெறுகின்றன.


நேற்று 19ஆம் தேதி திங்கட்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றது.

23ஆம் தேதி வெள்ளிக்கிழமை வீரகம்பம் வெட்டல் அதனை தொடர்ந்து 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நோன்புக் கட்டல் சடங்கு இடம் பெறும்.

26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆராதனையும் தீமிதிப்பு வைபவமும் இடம்பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார் .

வழமை போல ஒக்டோபர் 05 ஆம் தேதி கௌரி விரதம் இடம்பெறும்.

# சுற்றாடல் மேம்பாட்டுக்கு நிதியுதவி வழங்க தென்கொரியா இணக்கம்!



சுற்றாடல் துறையுடன் சம்பந்தப்பட்ட சுற்றாடல் மேம்பாடு கனிய மணல் அகழ்வு போன்றவற்றில் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு தென் கொரியா நிதியுதவி வழங்க முன்வந்திருப்பதாக இலங்கையின் சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

தென்கொரியாவில் நடைபெற்ற சுற்றாடல் மற்றும் கால-நிலை மாற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான உபாயங்கள் பற்றிய மாநாட்டில் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்து கொண்டு அந்நாட்டின் பிரதி சுற்றாடல் அமைச்சர் யோஜேசுல் உடன் இலங்கையில் சுற்றாடல் துறைக்கு உதவி வழங்குமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் இலங்கை - தென்கொரியா விவசாயிகளுக்கிடையில் பரஸ்பர தொழிநுட்ப மற்றும் பாரம்பரிய நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. சுற்றாடல் துறையில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது பற்றியும் ஆர்வம் காட்டப்பட்டது.

மேலும் இந்தத் துறைக்கு ஒத்துழைத்து நிதியுதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதானிகளையும் அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது சந்தித்தார். சுற்றாடல் காலநிலை மாற்றம் மற்றும் இதர திட்டங்களை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் நிதியுதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் முகவர் நிறுவனங்களுடன் அமைச்சர் நஸீர் அஹமட்; அங்கு நடத்திய பேச்சின் விளைவாக சுற்றாடலுடன் தொடர்புடைய திட்டங்களை நிறைவேற்ற பெருமளவான நிதியுதவிகள் கிடைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தியாகி திலீபனின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சியாக - புரட்சியாக முன்னெடுப்போம் என்று தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் கூட்டம் நல்லை ஆதீனத்தில் நேற்று நடைபெற்றது. 15 பேர் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தக் கட்டமைப்பு உருவாக்கப்படும் போது அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உள்வாங்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது இந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்க நியமிக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவையும் இதனுள் உள்வாங்கும் யோசனை முன்வைக்கப்பட்டது. அவ்வாறு உள்வாங்குவதானால் அந்தக் குழுவில் உள்ள யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் வெளியேற்றப்பட வேண்டும். அவர் அரசியல் கட்சி பிரதிநிதி. அவரை வெளியேற்றாவிட்டால், பொதுகட்டமைப்புக்குள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகள்பங்கேற்கமாட்டார்கள் என்று எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதையடுத்து எந்தவொரு அரசியல் தரப்பையும் சேராதவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட 15 பேர் பொதுக்கட்டமைப்புக்குப் பெயரிடப்பட்டனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வேலன் சுவாமி,

நினைவேந்தலை முன்னெடுக்கின்ற போது எந்தவித முரண்பாடும் இன்றி, யாரும் எந்தவித சுயலாபத்துக்கும் இதனை பயன்படுத்தாத விதத்திலே ஒட்டுமொத்த தமிழினமாக விடுதலைக்கான பயணமாக முன்னெடுப்பதற்காக நாங்கள் அனைத்து முயற்சிகளையும் இதய சுத்தியோடும் இலட்சியப்பற்றோடும் முன்னெடுக்க இருக்கின்றோம்.

இப்போதிருந்து இந்த கட்டமைப்பானது தன்னுடைய ஒருங்கிணைப்பு பணிகளை முன்னெடுக்க இருக்கின்றது. அந்த விதத்திலே கட்சித் தலைவர்களைச் சந்தித்து மக்கள் ஆதரவைப் பெற்று எவ்வாறு இந்த நிகழ்வை முன்னெடுக்கலாம் என்பது பற்றி நாங்கள் தொடர் ச் சியாக செயற்பட இருக்கின்றோம். நினைவேந்தல் இம்முறை மிகவும் சிறப்பாக இடம் பெற வேண்டும். எங்களுடைய உறவுகள் அனைவரும் இதற்கு முழுமையான ஆதரவை தர வேண்டும்.

மக்கள் அனைவரும் இம்முறை எழுச்சியைக் காட்ட வேண்டும். மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற கோட்பாட்டுக்கு அமைய மக்களுடைய எழுச்சி எப்பொழுது ஏற்படுகின்றதோ அப்போதே இனத்தினுடைய விடுதலை அனைத்துமே சாத்தியமாகும் என்பது நிதர்சனமான உண்மை. அந்த அடிப்படையிலே இந்த பொதுக் கட்டமைப்பு செயற்பட்டு தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மிக சிறப்பாக நினைவு கூரும் - என்றார்.

நினைவேந்தல் பொதுக்கட்டமைப்புக்குள் நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ். மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம், குரலற்றவர்களின் குரல் அமைப்பு பிரதிநிதி மு.கோமகன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் சார்பில் கனகரஞ்சினி மற்றும் இளங்கோதை, முன்னாள் போராளிகளான பஷீர் காக்கா, செழியன், சமூக விஞ்ஞான ஆய்வு மையப் பிரதிநிதி அ.ஜோதிலிங்கம், தீவக விருட்சம் அமைப்பின் பிரதிநிதி, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் எஸ்.ஜெல்சின் மற்றும் அ.விஜயகுமார், மாவீரர் பண்டிதரின் தாயார் மற்றும் முன்னாள் பெண் போராளி ஒருவர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

# கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி யாழ். அரியாலையிலும் பறந்தன பட்டங்கள்!

வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50 ஆவது நாளை முன்னிட்டு கிழக்கு அரியாலை பகுதியில் கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டம் ஏற்றினார்கள்.

நேற்று (திங்கட்கிழமை) காலை இந்த பட்டம் பறக்கவிடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

அடுத்து வரும் 50 நாள்களுக்கான செயற்பாட்டை நோக்கிய கூட்டிணைவு செயற்பாட்டை பறை சாற்றும் ஒரு முயற்சியாக இந்தப் பட்டம் பறக்கவிடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

சட்டத் தரணி அம்பிகா சிறிதரன் வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வின் முக்கியத்துவம் பற்றி பங்களிப்பு வழங்கிய இளைஞர், யுவதிகளுக்குத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதேவேளை, கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி நேற்று (திங்கட்கிழமை) மன்னார், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் பட்டங்கள் பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





## தமிழினத்தை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இன்றுவரை தமிழர் களின் தாயக நிலத்தைச் சிதைத்து சின் னாபின்னப்படுத்துவதற்கு சிங்கள பௌத்த அதிகார வர்க்கம் நுட்பமாகச் செயற்பட்டு வருகின்றது.

இன்றைய நிலையில் வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வரம் ஆல யத்துக்குச் சொந்தமான 18 ஏக்கர்க ளுக்கும் சற்று அதிகமான காணியைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

திருஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற ஆலயத்தின் காணியை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தர் ஐயா திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற காலத்தில் அபகரிக்க முயற் சிப்பது இரட்டிப்பான வேதனைகளைத் தமிழர்களுக்கு அளிக்கின்றது.

இதனைத்தடுப்பதற்காகதிருக்கோணேஸ்வர ஆலய அறங்காவலர் கள், சைவப்பெருமக்கள், தமிழ்ப் பற்றா ளர்கள் நடவடிக்கைகள் எடுத்து வரு கின்றார்கள்.

அதற்கான அரசியல் பலத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் கொடுக்க வேண்டியது தார்மீகப் பொறுப்பாகும்.

குறிப்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவராக உள்ளார். அதற்கான கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சம்பந்தர் ஐயா அனுப்பி யுள்ளார்.

மேலும் இந்த அரசுடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தியே யாக வேண்டும்.

கிழக்கிருப்புவாதிகள் என்று மார்தட்டு வோர் திருகோணமலையும் கிழக்கு மாகாணத்துக்குரியது என்பதை நினை வில் கொள்ள வேண்டும்.

கிழக்கின் இராஜாங்க அமைச்சர்கள் தமது ஊருக்குள் தொகுதிகளுக்குள் மாவட்டத்துக்குள் மாத்திரம் என்று தமது பாரிய பொறுப்புகளைச் சுருக்கக் கூடாது.

அவர்கள் சார்ந்த இந்த அரசு அமைச்சுகளைத்தமக்குத்தந்ததால்நன்றியுணர்வோடு கைகளை உயர்த்தித் தலைகளை ஆட்டும் பொம்மையர்களாக இருக்கக்கூடாது. 'எம்கடன் தலையாட்டிக் கையுயர்த்திச் சலுகைகளை அனுபவிப்பது மட்டுமே' என்ற தாரகமந்திரத்தோடு இவர்கள் செயற்படக்கூடாது.

இதனை மக்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. 'பேச்சுப் பல்லக்கில் தம்பி கால்நடையில்' என்பதான செய்கைகள் இப்படியே இருக்கக்கூடாது.

பேரின அடிப்படைவாத அதிகார வர்க்க ஆட்சிக்காலங்களில் தமிழின அழிப்புகள், உடைமை அழிப்புகள், தாயக நிலப்பறிப்புகள், கலாசார அடையாள அழிப்புகள், வரலாற்றுத் தடய அழிப்புகள், நினைவுத்தூபி அழிப்புகள், உணர்வு அடக்குமுறைகள் போன்றவையே நடைபெறகின்றன.

இன அழிப்புகளுக்கு 1958,1977, 1983,2009 போன்ற பல காலங்களில் நடைபெற்ற கொடூர அழிப்புகள் எடுத்துக் கட்டுகளாக உள்ளன.

இவ்வன்முறைகளால் அழிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இது வரை உள்நாட்டுப்பொறிமுறைகளால் நீதி வழங்கப்படவில்லை. ஆனால், தம்மிடம் உள்நாட்டுப் பொறிமுறை இருப்பதாக 2009 இல் இருந்து இன் றைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வரை ஐக்கிய நாடுகள் சபையினை ஏமாற்றி வருகின்றனர். தமிழர்களை ஏமாற்றி - முஸலிம்களை ஏமாற்றி - சிங்களவர்களை ஏமாற்றி சர்வதேச சமூகத்தையே ஏமாற றக்கூடிய நிலைக்கு ரீலங்கா ஆட்சியா ளர்கள் வந்துள்ளார்கள்.

சர்வதேச ஐக்கிய நாடுகள் சபையும் ஏமாந்து விடக்கூடாது என்பதே தமிழர் களின் ஏகோபித்த கோரிக்கையாகும்.

தாய்மண்ணில் தமிழர்களின் குடித்தொகையைகுறைப்பதற்கு அச்சு றுத்தல் அழிப்பு உத்திகளைக் கையாளும் சிங்கள அதிகார வர்க்கமானது அதன் மூலமாக தமிழர்களை அகதிக ளாக்கி ஏறத்தாழ 13 இலட்சம் தமிழர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்துள்ளது. தமிழர்களின் இருப்பை இழக்கச் செய்வதில் இன்னுமோர் அதிகார உத்தி தமிழர் தாயக நிலங்களை சட்டரீதியாக வும் சட்ட விரோதமாகவும் அபகரிப் பதாகும். இதற்கான சட்டரீதியான உத்திகளாக இருப்பது அபிவிருத்தி, விவசாக்குடியேற்றம், பாதுகாப்பு, உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி போன்ற தந்தி ரோபாயங்களாகும்.

அதற்குரிய நுட்ப நடைமுறைகளாக மகாவலி அபிவிருத்தி, வனவளப்பாது காப்பு, வனஜீவராசிகள் பாதுகாப்பு, கரை யோரப் பாதுகாப்பு, தொல்லியல் பாது காப்பு, அரச காணிகள், காணிச் சீர்திருத்தம், எல்லை மீள்நிருணயம், கட லோரம் இல்லாத மாவட்டங்களுகளைக் கடற்கரைகளோடு இணைத்தல் போன் றவை அமைகின்றன.

இவற்றைவிட சட்ட விரோதமான முறையிலும் குண்டர்களின் அச்சுறுத் தல், இனவழிப்புகள் மூலமாக தமிழர்களின் உறுதிக் காணிகள், ஒப்பக் காணிகள் பறிக்கப்படுகின்றன.

இதற்குத் தமிழர்கள் மீதான சிங்கள அதிகார தரப்பினரதும் கையாட்களி னதும் வன்செயல்கள் உதவுகின்றன.

தென்னலங்கையிலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்க ளின் எல்லைக் கிராமங்களின் மக்களும் அழிப்புகள், அச்சுறுத்தல்களால் அகற றப்பட்டுள்ளனர்.

கல்லோயா, அல்லை கந்தளாய், சேருவில, வெலி ஓயா, பதவியா, சிறிபுர, லங்காபட்டுன போன்ற பெயரகள் சிங்க ளப் பேரினவாத அபகரிப்புகளின் சான்றுகளாகும்.

இரண்டரை ஆண்டுகள் கால ராஜ பக்சக்களின் ஆட்சிக்காலத்தில் மட் டக்க ளப்பில் மயிலத்தமடு, மாதவணை, கெவு ளியாமடு, வடமுனைநெளுக்கல்மலை, வாகரை காரக்காடு போன்ற இடங்கள் ஆக்கிரமிப்பை எதிர்கொண் டுள்ளன.

கரடியனாறு குசலானமலை முருகன் கோயில், வேலோடுமலை, தாந்தாமலை, கன்னியா, திருக்கோணேஸ்வர ஆலயக் காணி, முல்லைத்தீவில் வெடுக்குநாறிமலை ஆலயம், குருந்தூர் மலை ஆலயம் போன்றவை சிங்கள பௌத்த தொல்லியல் ஆக்கிரமிப்புப் புக்குள் அல்லது பார்வைக்குள் உட் பட்டுள்ளன.

இவற்றை விடவும் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் முப்படைகளுக்கும் வேண்டிய காணிகள் என்ற அடிப்படையில் பல நூற்றுக் கணகான ஏக்கர் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2022இல் வெளியிடப்பெற்றது.